15/05/2012

The Morning Star
CACM Central Office
"Asia House"
Maruthanarmadam
Chunnakam
Sri Lanka.

# உதய தாரகை
## The Morning Star

A Christian Publication Established 1841

Vol. 173 - Jaffna - Tuesday 8th May 2012 . No.1

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.*

Subscribtion Rs.20/=
(postage Include)
Please send your News & Articles to
The Editor
The Morning Star,
"Asia House"
Maruthanarmadam, Chunnakam.
Email:
thecacmmorningstar@gmail.com

# முன்னேற்றப் பாதையில் மூன்றாவது கூட்டத்தொடர் ! மூன்று நாள் கூட்டத் தொடரில் பற்பல முடிவுகள் !!

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் 3வது கூட்டத் தொடர் கடந்த மார்ச் 15,16,17ம் திகதிகளில் கிறிஸ்தவ இறையியல் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் "உன் கடவுளிடத்தில் முழு இருதயத்தோடும் நம்பிக்கையாயிரு" நீதி:-3:5 என்ற திருமறை வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றது. திருச்சபையின் 2வது தலைவர் வண.ஏ.ஜெயக்குமாரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக்கூட்டத் தொடரில் குருமார், பிரதிநிதிகள், அழைக்கப்பட்ட விருந்தாளிகள் என 130 பேர் பங்கு கொண்டு அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் பணிகளுக்கு மகத்தான ஆதரவு தெரிவித்தனர்.

மார்ச் மாதம் 15ம் திகதி ஆச்சிரமத்தில் காலை வழிபாட்டுடன் பொதுக் கூட்டத் தொடர் ஆரம்பமானது. யாழ்.பிராந்தியத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வழிபாட்டில் அருள் அறிவர்.டயன்சந்த் கார் அவர்கள் இறை செய்தி நல்கினார். தொடர்ந்து கூட்டத்தொடர் இறையியல் கல்லூரி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரதி செயலாளராக வண.ரீ.தேவநேசன் அவர்கள் செயற்பட்டார். தொடர்ந்து மூன்று நாட்கள் இந்தக் கூட்டத் தொடர் நடைபெற்றது. திருச்சபை சம்மந்தமான பல முடிவுகள் இங்கு எடுக்கப்பட்டன. இறுதி நாளில் நடைபெற்ற தெரிதலில் வண.ஈனோக்.பீ.புனிதராஜா அவர்கள் தலைவராகவும், டாக்டர்.ஹென்றி இராஜரட்ணம் உபதலைவராகவும், வண.ஏ.பி.தேவதாஸ் செயலாளராகவும், திரு.வி.மித்திரா ரஞ்சன் பொருளாளராகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்களுடன் சேர்ந்து பணியாற்ற நிர்வாகசபை அங்கத்தவர்களாக வண.வி.இராஜ்குமார், திரு.ரி.உதயகுமார், செல்வி டயானா பேரம்பலம், த^ரு . எஸ் . ஜே . செல்வராச, வண.எஸ்.குகனேஸ்வரன், திரு.கே.பிரதாபன் , திருமதி. சுதா சுதாகர், திரு. எஸ்.உதயராஜ், வண. எஸ் ஐ. ஆனந்தராஜா, திரு பீ. சசிகரன், திருமதி. செலீனா பிறேம்குமார், திரு. வி. சின்னத்துரை, வண. டானியல் மோகன், செல்வி. சத்தியசோபனா சத்தியநாதன், திருமதி. ஐரீன் ரமேஸ்குமார், திரு. மனோ தேவசகாயம், கலாநிதி தர்சன் அம்பலவாணர், திரு.றோய் விஜயரட்ணம், திரு.எஸ். பி. சத்தியசீலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களை 'உதயதாரகை' வாழ்த்துகிறது. கூட்டத்தொடரின் இறுதி நாளின் முடிவில் புதிய நிர்வாக அங்கத்தவர்களுக்கான பதவி அமர்த்தல் வழிபாடு, முன்னாள் தலைவர்களாகிய வண.அ.ஜெயகுமாரன் மற்றும் வண.செ.ஜெயநேசன் தலைமையில் நடைபெற்றது. கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தில் நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற திருவிருந்து வழிபாட்டை புதிதாக தலைமை மற்றும் செயலாளர் பதவிகளை பொறுப்பெடுத்துக் கொண்ட வண.ஈனோக் பூ.புனிதராஜா, வண.ஏ.பி.தேவதாஸ் ஆகியோர் நடாத்தினர்.

## உண்மையை மறைக்க பொய்மையால் முடியாது.

*வண. ஈனோக் பூ. புனிதராஜா*

பிராந்தியத் தலைவர் அருட்திரு.டி.எஸ்.குகனேஸ்வரன் தலைமையில் வன்னிப் பிராந்திய திருச்சபைகள் இணைந்து பாரதிபுரம் பாடசாலை வளாகத்தில் நடாத்திய உயிர்ப்புத் திருநாள் பஜனையில் திருச்சபைத் தலைவர் அருட்திரு. ஈனோக் பூ.புனிதராஜா அவர்கள் ஆற்றிய அருளுரையின் சுருக்கம்.

"அநீதி உண்மையை மறைத்து பொய்யை உலக்கு சொல்ல முற்பட்டபோதும் பொய்மை உண்மைக்கு முன்னால் தவிடுபொடியாகியது. இது தான் உயிர்ப்பின் செய்தி. இச் செய்தி இன்றும் பலரை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு வன்னித் திருச்சபை மக்கள் எமக்கு முன்னால் சாட்சிகளாக விளங்குகின்றார்கள். மரணத்தின் இறுதி விளிம்பு வரை சென்ற இம்மக்கள் இறை நம்பிக்கையினால் உயிர்ப்பு பெற்ற மக்களாக, உயிர் துடிப்புள்ள சபைகளாக இருப்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மக்களை இறை நம்பிக்கையில் வளர்த்து வரும் என் சகோதர குருக்களை வாழ்த்துகின்றேன்" என தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் இயேசுவை கொலை செய்து கல்லறையிலே அடக்கம் செய்த படையினர் கல்லறைக்குக் காவல் வைத்தார்கள். இயேசு உயிர்த்தபோது அதை மறைப்பதற்காக யாரோ அவரது உடலை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்ற பொய்யைப் பரப்புகின்றார்கள். இந்தப் பொய்மையால் உயிர்த்த உண்மைக்கு முன்னால் நிலைநிற்க முடியவில்லை. இதனால் அதிகார வர்க்கத்தினர் தடுமாறினார்கள். ஆனால் பதற்றத்தினால் தடுமாறிய பலரை இவ் உயிர்ப்பு தடம் பதிக்க வைத்தது.

பெண்கள் கூட்டத்திடம் பயம், கேள்வி, தோல்வி, அழுகை, போராட்டம் இவற்றோடு கல்லறைக்குச் சென்றவர்களுக்கு மகிழ்ச்சியின் செய்தி அவர் உயிர்த்தெழுந்தார். அல்லது இனி வாழ்வு இல்லை, பாதை மாறிய பயணம், பலவிதமான கேள்விகள், பயத்தினால் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசிக்கொண்டு எம்மாவூர் சென்ற சீடர்களுக்கு கொடுத்த காட்சி இவையெல்லாம் சொல்லும் செய்தி துன்பப்படும் மக்களோடு தன்னை இணைத்துக் கொள்கின்றார் இயேசு.

**இயேசு உயிரோடு இருக்கையில் அவரின் உயிருக்கு காவல் வைத்து பாதுகாக்கத் தவறியவர்கள், உயிரற்ற உடலுக்கு காவல் வைத்து பாதுகாத்தார்கள்.**

இன்றும் துன்பத்தோடு, அழுகையோடு, பாதை மாறிய பயணத்தில் தடுமாறும் உலகிற்கு உயிர்த்த ஆண்டவர் சொல்லும் செய்தி நான் உலகத்தை ஜெயித்துவிட்டேன் என்பதாகும்" என தெரிவித்தார்.

இப் பஜனையில் திருச்சபைகளின் சிலுவைப் பாடுகள், உயிர்ப்பின் பாடல்கள், கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெற்றன.

## வரவேற்பு நிகழ்வு

உயிர்ப்புத் திருநாளன்று மாலை பாரதிபுரம் பகுதியில் வன்னிப் பிராந்திய சபைகள் இணைந்து புதிய நிர்வாகிகளாகிய தலைவர் அருட்திரு. ஈனோக் பூ.புனிதராஜா, செயலாளர் அருட்திரு. பி.தேவதாஸ், பொருளாளர் திரு.வி.மித்திரா ரஞ்சன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. இந்நிகழ்வு பிராந்தியத் தலைவர் அருட்திரு. டி.எஸ். குகனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. சுதந்திரபுரம் தொடக்கம் ஜெயபுரம் வரையிலான திருச்சபைகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பெண்கள் சங்கத்தினர் சார்பில் செல்வி கிளாடிஸ் ஜெயரட்ணம், வாலிபர் சார்பில் திரு.க.பிரதாபன், குருமார் சார்பாக அருட்திரு. டி.எஸ்.மதியாபரணம் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

## பெரியவெள்ளி பஜனை

கிளிநொச்சி கிறிஸ்தவ ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த பெரியவெள்ளி சிலுவைப் பாடுகள் பஜனை நிகழ்வு பரந்தன் மெதடிஸ்த தேவாலயத்தில் மாலை 4.00 மணிக்கு ஒன்றியத் தலைவர் அருட்பணி. பிறின்ஸ்டன் தலைமையில் அருட்பணி. டி.எஸ். மதியாபரணம் அவர்களின் செபத்துடன் ஆரம்பமானது. இதில் மெதடிஸ்த, அங்கிலிக்கன், பப்டிஸ்த, அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபைகள் சிலுவை காட்சியில் பாடல்களை பாடினர். பாரதிபுரம் காவேரி கலாமன்றத்தினர் சிலுவையில் சிந்திய கண்ணீர் என்னும் கிறிஸ்துவின் பாடுகளை சித்தரிக்கும் நாடகத்தை அரங்கேற்றினர். இது பலரதும் பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் சுதந்திரபுரத்தில் வழிபாடுகள் ஆரம்பம்

இடப்பெயர்வு காலத்தில் அநேகருக்கு அடைக்கலமாயிருந்த சுதந்திரபுரம் திருச்சபையில் மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் வழிபாடு நடைபெறத் தொடங்கியுள்ளது. கடந்த 27.03.2012 அன்று வன்னிப்பிராந்திய குருமுதல்வரின் தலைமையில் அப்பிராந்தியத்தின் அனைத்து குருமாரும் ஒன்றிணைந்து திருச்சபை வளாகத்தில் கால் பதித்தனர். அன்றைய நாளில் அத்திருச்சபையின் குருவானவரின் ஒத்துழைப்புடன் அனைத்து சபை மக்களின் வீடுகளுக்கும் சென்று அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன் அவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. மாலை 5.30 மணியளவில் வீடு சந்திப்பு நிறைவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து 7 மணிக்கு விழிப்பிரவு ஆராதனை திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. இத் திருச்சபையைச் சேர்ந்த அனைத்து குடும்பங்களும் உணர்ச்சி பூர்வமாக இவ்வழிபாட்டில் பங்கு கொண்டனர். குறிப்பாக வாலிபர்கள் சிறப்பாக செயற்பட்டனர்.

கீழ் காணும் படம் இறுதி யுத்தத்தின் போது எமது குருமாரும் சில சபை மக்களும் தஞ்சமடைந்திருந்த பதுங்குகுழியும் ஆலயமும்.

வழிபாட்டில் கலந்து கொண்ட சபை மக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 MAY 2012
PUBLIC LIBRARY
JAFFNA

# உதய தாரகை

கிறிஸ்துவுக்குள் அன்பான எம் இனிய உறவுகளே!

உதய தாரகை பத்திரிக்கை மூலம் திரும்பவும் தங்களோடு உறவுகளை புதுப்பித்துக்கொள்ள இறை மகன் இயேசு தந்த உயிர்ப்பின் வழ்வுக்காக அவருக்கு எமது முதற் கண் நன்றிகள்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் பணியாற்றியவர்கள் ஆகியோரை இந்நேரத்தில் இன்முகத்துடன் வாழ்த்துகின்றோம்.

இத்திருச்சபையின் வரலாற்றில் இம்மாற்றம் ஒரு புதிய திருப்பம். இன்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன் இத்திருச்சபையின் தாய்ச்சங்கத்திலிருந்து வாலிபர்கள், இளம் குருமார்கள் குடும்பம் குடும்பமாக புறப்பட்டு வந்து எமது தாயகத்தில் பணியாற்றியதைப் போன்று இப்போ இத்திருச்சபையிலும் இளம் குருமாரும், வாலிபர்களும், வாலிப சகோதரிகளும் இத்திருச்சபையின் பொறுப்புக்களை எடுத்து இறையரசின் திருப்பணியில் கை கோர்த்து நிற்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

"சிறு பிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது" என்னும் நம் முன்னோர்கள் சொன்ன தாரக மந்திரத்தை தவிடு பொடியாக்கிட இச் செயற்குழு பக்க பலமாக பல குழுக்களை அமைத்து அதில் பல துறைகளிலும் விவேகமுள்ளவர்களை ஆலோசகர்களாக வைத்திருப்பது இத்திருச்சபையின் இன்னுமொரு சிறப்பாகும்.

எமது திருச்சபை தொடர்ந்தும் பழமை பேசிக்கொண்டிருக்காமல் "பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நோக்கி ஓடுகிறேன்" என அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதைப் போல் முன்னோக்கிப் பார்க்க வேண்டும். எமக்கு முன்னே பல பணிகள் சவாலாக காத்துக்கிடக்கின்றன. இத்திருச்சபை "தெருச்சபையாக" மாற வேண்டும். தெருச்சபை என்று சொன்னால் பலர் விரும்பமாட்டார்கள். தெருச்சபை என்று இங்கு குறிப்பிடப்படுவது தெருவோரங்களில் தான் பணிகள் தேவை. அங்கே தான் கலிலேய மக்கள் வாழ்கின்றனர். அடக்கப்பட்டு, ஓரம்கட்டப்பட்டு, முகமிழந்து உயிருக்காக, நீதிக்காக, உண்மைக்காக, உணவுக்காக உறவுகளைத் தேடி அலையும் மக்கள் அங்கே தான் வாழ்கின்றார்கள். அவர்களின் பிரதிநிதி தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவர் தான் "மானிட மகன்". அதனால் தான் மனுக்குலம் படவேண்டிய அத்தனை பாடுகளையும் தமதாக்கிக் கொண்டார்.

மனிதனாக பிறந்த எல்லாருக்கும் மரணம் இருக்கின்றது என்பதை தன் மரணத்தின் மூலமும், இம்மரணத்திற்குப் பின் உயிர்ப்பு உண்டு என்பதை தன் உயிர்த்தெழுதல் மூலமும் நிரூபித்தார்.

மரணம் நித்திரைக்கு ஒப்பானது. நம்பிக்கையின் அடையாளம் உயிர்த்தெழுதலின் அடையாளம். உயிர்த்தெழுதலின் அடையாளம் இறை மாட்சி வெளிப்படும் அடையாளம். இறை கரிசனையின் அடையாளம். இதனை லாசருவின் உயிர்ப்பில் வெளிப்படுத்தினார். (யோவான்:-11ம் அதிகாரம்). தன் உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளமாகவும், விசுவாசிகளின் மரணம் உயிர்ப்பின் முன்னடையாளமாகவும் நிரூபித்தார். கிறிஸ்துவை நம்புகின்றவர்கள் மரணமில்லா பெரு வாழ்வு வாழ்வார்கள் என்ற உண்மையை கற்றுத் தந்தார். இது உலகறிந்த உண்மை. இந்த உண்மைக்கு முன்னால் பொய் நிலைக்காது. ஆதிக்க சக்திகள் இவ்வுண்மையை மறைக்க முயன்றார்கள். அதனால் தான் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு நற்செய்தி நூல்களில் "உயிர்த்தெழுந்த" என்று 5 தடவைகளும் 40ம் நாள் பரத்துக்கு ஏறிப்போவதற்கு முன் 5 தடவைகளுமாக 10 தடவைகள் தன்னை உயிரோடு இருப்பவராக காண்பித்தார்.

இவ்வுயிர்ப்பின் செய்தி தெருவுக்குப் போக வேண்டும். வாழ வழி தெரியாது வாழும் இத்தேச மக்கள் உயிரடைய வேண்டும். இதற்காக நானும் நீங்களும் கிறிஸ்துவின் சிந்தையை நமதாக்கிக் கொண்டு போட்டி, பொறாமை, எரிச்சல், வீதண்டா வாதம், புறங்கூறுதல், பயம், அழுகை, தடுமாற்றம், பாதை மாறிய பயணம், பேசக் கூடாத வார்த்தைகளை கொட்டல் போன்ற தீய காரியங்களை எமது உள்ளத்திலிருந்து களைந்து விட்டு முன்னோக்கி நடப்போம்.

எமக்கு முன்னே பெரும் சவால்கள் உண்டு. எம் திருச்சபைத் தலைவர்கள், மிஷனரிமார், பொது நிலையினர் செய்த பணிகள் அனேகம். அப் பணிகளை எம் கையில் எடுப்போம். ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு மகனின், மகளின் பெரும் பொறுப்பு இறையரசின் திருப்பணி.

இப்பத்திரிக்கையை இன்னுமொருவருக்கு அறிமுகப்படுத்துவதே நீங்கள் செய்யும் பெரும் பணி. இப்பத்திரிக்கை உயிரோட்டம் உள்ள பத்திரிக்கையாக தொடர்ந்து வர தங்கள் ஆதரவுகளைத் தாருங்கள். இப்பத்திரிக்கை தெருவுக்குச் செல்ல வேண்டும். தவித்திடும் மக்களின் ஏக்கத்திற்கும் ஆன்மீகத்திற்கும் ஆறுதல் தர உதவிடுங்கள். செபியுங்கள்.

D.S.M

## மூச்சு காற்றிற்கு முற்றுப்புள்ளி..??

பாட்டன் மரம் நட்டு
பாடுபட்டு உரம் போட்டு
தோட்டம் தோளேற
துளிர் வீடுமே எம் வாழ்வு

மாட்டுடன் ஏர் பூட்டி
மண்வளம் சார் ஏற்றி
மொட்டுடன் கனி சூழ
மேலேறுமே! நம் கனவு

போர் சங்கு ஒலி கேட்க..
புறபட்டோம் புதுமை காண..
படை கலை புயலாட்டம்
விடையின்றி சிறைவாட்டம்
கதிர் காய்த்து உயராது
கதி நேரம் பொடியாச்சு
சதி வந்து குடியேற
சுடரில்லா விளக்காக!

நிலம் உண்டு முகவரி வேறு!!
இடம் எங்கள் இடமெங்கே?
முகவரி காட்டி நிலம் கேட்க..
மூச்சு காற்றிற்கு முற்றுப்புள்ளி..

வெள்ளரசு மரங்களின் வேர்
வீட்டுக்குள்ளே ஊடுருவல்
எம்மவரின் சாறுறிந்து
ஏவறையிடும் ஓசையெங்கும்

ஊனம் என் அடைமொழி!
உயிர் தந்திடுமா அறவழி?
நிதம் தெரியுதே நிர்வாணங்கள்!!
நிஜம் சொல்லுமா
இறைவேதங்கள்???

ராஜன் ரோகான்
பெரியநீலாவணை

## யூதாஸ் வீசியெறிந்த காசுகள்.....!

"ஓ...யூதாஸே....,
நீ அந்த
முப்பது வெள்ளிக்காசுகளை
வீசி யெறிந்து விட்டாய்!
கைகளில் பட்ட களங்கம்
நெஞ்சத்தை அரித்துத் தின்ன
ஆரம்பித்து,
உன்
மூச்சுக்காற்றில்
துரோக வாடையை
வெளிப்படச் செய்ததால் —
நீ நான்று கொண்டு செத்தாய்!
'முத்த' காரணர்களும்
முப்பது வெள்ளிக்காசுகளின்
சொந்தக்காரர்களும்
முகம் செத்து ஓடச்செய்தாய்!
அன்று நீ
வீசியெறிந்த
முப்பது காசுகள்
இன்று உலகில்
கோடானு கோடி ரூபாய்களைப்
பிரசவித்திருப்பதால் —
ஆண்டவரின் உடலாம் திருச்சபைக்கு
ஒன்றல்ல, ஓராயிரம் முத்தங்கள்
கொடுத்து
'பதினொரு சீடர்' தம் பரம்பரையினர்
அவற்றைப்
பங்கு போட்டுக் கொள்கிறார்கள்!
அவர்கள் தான்
வாய் கூசாமல் உன்னை
வைது கொட்டுகிறார்கள்!
அத்தனை ரத்தப்பழியும்
உன் தலைமேல் தானாம்!
ஆண்டவரைக்
காட்டிக் கொடுக்கும் 'வழி'யை
நீ
கற்றுக் கொடுத்து விட்டாயாம்!
நான்று கொண்டு சாகத்தான்
தெரிந்ததாம் உனக்கு!
நாற்றமெடுக்கும் என்றாலும்
வாழ்க்கையை வாழ்ந்துகாட்டத்
தவறிவிட்டாயாம் நீ!

- தயானந்தன் பிரான்சிஸ் -

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

இம்மாதம் பிறந்த நாட்களைக் கொண்டாடும்
அனைத்து உறவுகளுக்கும்
உதய தாரகை
தன் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.


## திருமண சேவை

அன்பின் தாரகை வாசகர்களே!

இன்று கிறஸ்தவ குடும்பங்களின் பல பிள்ளைகளுக்கு ஏற்ற காலத்தில் பொருத்தமான துணைகளை தேடிக்கொள்வதில் பல சிரமங்கள் உள்ளன. இதனால் பல பிள்ளைகள் தம் விசுவாச வாழ்வை இழந்துள்ளனர். இதனை உணர்ந்து இப்பத்திரிகை மூலம் ஓர் பொருத்தமான துணையை தேடிக் கொடுக்கும் சேவையை செய்ய முயற்சிக்கின்றோம்.

ஆகவே தேவையில் உள்ளவர்களின் விபரங்களை உங்கள் போதகருக்கூடாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

## இந்த வாரம் கவிக்களம்



போட்டி இல.5

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும். தரமான ஒரு கவிதைக்கு பரிசு வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி
கவிக்களம்
உதய தாரகை
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்
சுன்னாகம்.

முடிவு திகதி 05-06-2012

## ஆக்கங்கள்

ஆன்மீகத்தில் விழிப்புணர்வூட்டக்கூடிய கவிதைகள், கட்டுரைகள், படித்துச் சுவைத்தவை, சிந்தனைத் துளிகள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது. தரமானவை இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். தங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்
உதய தாரகை
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி
மருதனார்மடம்
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ பயிற்சி

பாழ் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் 2012ம் ஆண்டில் குருத்துவ பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புகின்ற சகோதர சகோதரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி க.பொ.த (சா.த)ல் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியும், உயர் தரத்தில் சித்தியடைந்திருப்பதும் சிறப்பானது. திருமறை சார்ந்த ஏனைய பயிற்சிகள் பெற்றிருத்தலும் வரவேற்கத்தக்கது.

பயிற்சியை முடித்து வெளியேறுபவர்கள் திருச்சபையில் முழுநேர பணியாளர்களாக பணியாற்றும் வாய்ப்புக்கள் உண்டு. பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் தங்கள் குருவானவரின் சிபாரிசுடன்

பதில் முதல்வர்,
கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்,
சுன்னாகம்

என்னும் முகவரியுடன் அல்லது

077 3223123
021 3213210

எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

பதில் முதல்வர்

# திருமுழுக்கு

உயிர்ப்புத் திருநாள் அன்று கிளிநொச்சி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் காலை வழிபாட்டின்போது சபைக்குரு அருட்திரு.டி.எஸ்.மதியாபரணம் அவர்களால் ஐந்து வளர்ந்தோருக்கு திருமுழுக்கு வழங்கப்பட்டது. இவ் வழிபாட்டில் தற்காலிகமாக கிளிநொச்சி ஆலயத்தை அமைத்து வழிபாடுகளை நடாத்த இடம் தந்த குடும்பத்தினரும் திருமுழுக்குப் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய ஊழியர்கள்


பி.சுதாகரன்


வே.டேவிட் நிருஷிகன்



ஜெ.ஜெயகுமார்


கங்காபிரசாத்


வசந்தன் ஆனந்த்

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியிலும், கண்டி பிலிமத்தலாவ இலங்கை இறையியல் கல்லூரியிலும் இறையியல் படிப்பையும், குருத்துவ பயிற்சியையும் நிறைவுசெய்து கொண்டு ஐந்து புதிய ஊழியர்கள் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் வன்னி, வவுனியா, திருகோணமலை, கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு திருப்பணிக்காக இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். இப்புதிய ஊழியர்களை தங்கள் செபங்களில் தாங்கிக் கொள்ளுங்கள்.

# தலைவரின் வன்னி விஜயம்



எமது திருச்சபைத் தலைவர் அருட்திரு.ஏனோக் பூ.புனிதராஜா அவர்கள் பரிசுத்தவாரம் முழுவதும் வன்னியில் தங்கியிருந்து ஜெயபுரம், ஆனைவிழுந்தான், முறிப்பு, முறிகண்டி ஆகிய இடங்களில் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொண்டு மறையுரையாற்றினார். புதிய தலைவர் அம்மக்களோடு தங்கியிருந்து வழிபாடுகளில் கலந்துகொண்டதையிட்டு பெருமகிழ்ச்சி கொண்டனர்.

# ஆன்மீகக் கூட்டம்

வன்னிப் பிராந்திய நற்செய்திப் பணிக்குழு அண்மையில் சுதந்திரபுரம், விசுவமடு திருச்சபைகளை இணைத்து ஆன்மீகக் கூட்டம் ஒன்றினை சுதந்திரபுரத்தில் நடாத்தினார்கள். இக்கூட்டம் திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. இவ்வழிபாட்டை சபைக் குரு அருட்திரு. சு.தேவகரன் அவர்களின் உதவியுடன் பிராந்தியக் குருவால் நடாத்தப்பட்டது.

திருமறைப் படிப்பு ஒன்று யாழ்.பிராந்திய வாலிபர் இணைப்பாளர் திரு.அ.தேவானந் அவர்களால் நடாத்தப்பட்டது. இத்திருமறைப் படிப்பு மிகச் சிறப்பாகவும் விசுவாசிகளின் விசுவாச வாழ்வை உயிருட்டுபவையாகவும் அமைந்தது. இந்நிகழ்வில் சாட்சி பகரல், தனிப்பட்ட ஜெபங்கள், புதிய பாடல்கள் என்பன சிறப்பாக அமைந்திருந்தன. இவ் ஆன்மீகக் கூட்டத்தில் இப்பிராந்திய அனைத்து குருமாரும் கலந்துகொண்டனர்.



ஏழாலை தெற்கு மற்றும் வடக்கு திருச்சபைகள் இணைந்து வருடம் தோறும் வண.ஜீ.டி. மைனசீலன் தலைமையில் ஈஸ்டர் தினத்தையிட்டு நடாத்தப்படும் கிறிஸ்து உயிர்ப்பு நற்செய்தி அறிவிப்பு பவனி ஏழாலை பிரதேசத்தைச் சுற்றி வலம் வந்தது. கிறிஸ்து உயிர்ப்பு பாடல்களை ஒலிபரப்பி நற்செய்தி அடங்கிய கைப்பிரதிகளும் அச்சிடப்பட்டு கிராம மக்களுக்கு வழங்கப்பட்டது. கிராம மக்கள் உற்சாகமாக அப்பவனியை கண்டுகளித்தனர். ஏழாலை தெற்கில் 09.04.2012 அன்றும் ஏழாலை வடக்கில் 10.04.2012 அன்றுமாக இரு தினங்கள் இந்நிகழ்வு நடைபெற்றது. பவனியை சிறப்பிக்கும் வண்ணம் சிறிய ரக உழவு இயந்திரத்தில் உயிர்ப்புக் காட்சியை தாங்கிய வண்ணம் பாடல்களோடு இப்பவனி வலம்வந்ததை மேலே படத்தில் காணலாம்.

# யூதாஸ் வேடத்தில் நடித்தவர் தவறுதலாக தூக்குக் கயிறு இறுகி மரணம்


கிறிஸ்தவ வரலாற்றில் வரும் யூதாஸ் கதாபாத்திரத்தில் நடித்த நடிகர் ஒருவர் தவறுதலாக ...

சம்பவம் பிரேசிலில் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்தவர்களின் பெரிய வெள்ளி தினத்தையொட்டி ஐட்டரே நகரில் அரங்கேற்றப்பட்ட இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை வெளிப்படுத்தும் நாடகத்தில் யூதாஸ் வேடத்தில் நடித்த தியகோ கிலிமெக் என்ற 27 வயது நடிகரே இவ்வாறு பரிதாப மரணத்தைத் தழுவியுள்ளார்.

அவர் யூதாஸ் தூக்கிட்டு தற்கொலை செய்யும் காட்சியில் நடித்தபோது தூக்குக் கயிறு அவரது கழுத்தை உண்மையிலேயே இறுக்கியதால் அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

அவர் தூக்குக் கயிற்றில் கழுத்து இறுகித் துடிப்பதை அவரது சிறந்த நடிப்பின் வெளிப்பாடு எனக் கருதி அலட்சியமாக இருந்த சக நடிகர்கள், 4 நிமிடங்கள் கழித்தே ஏதோ அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளதை உணர்ந்துள்ளனர்.

அதனையடுத்து, உடனடியாக மருத்துவ ... செல்லப்பட்ட தியகோ


கிலிமெக் ஞாயிற்றுக்கிழமை மரணமானார். அவர் தொடர்பான பிரேத பரிசோதனை திங்கட்கிழமை இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# CACM Boards & committees for the bi ennium 2012-2013

### Social action and development board
1. Chairperson CACM
2. Treasurer CACM
3. Project Manager - Convener
4. Rev. Dr. S. Jeyanesan
5. Rev.A. Jeyakumaran
6. Regional Minister North
7. Regional Minister East
8. Regional Minister Wanni
9. Regional Minister UP/COL
10. Ms. Nalayini
11. Mr.J.P.Mills
12. Mr.S.Jeganathan
13. Ms.Selina Premkumar

### St. John's VTC Governing Board
1. Chairperson CACM
2. Treasurer CACM
3. Principal VTC
4. Manager VTC - Convener
5. Area minister east
6. Mr. S.Sinnathurai
7. Mrs. Shelina Premkumar
8. Rev. S.Jeyanesan
9. Mr. Prem Mills
10. Rev. T.Thevanesan
11. Mr.N.D.Selvarajah
12. Mr.A.Benjamin
13. Mr.V.Yogarajah

### Finance Committee
1. Chairperson CACM
2. Treasurer CACM - convener
3. Vice Chairperson CACM
4. Secretary CACM
5. Mr.Paul Nesarajah
6. Mrs. Irene Rameshkumar
7. Mrs. Shelina Premkumar
8. Dr.Prince Jeyadeva.
9. All Regional Ministers

### Morning Star- Committee
1. Rev. M.Jude Sutharshan
2. Rev. D. S. Mathyaparanam - Tamil Editor
3. Rev. Sathees Daniel
4. Mr. P.N.Jeyaseelan
5. Mrs. E. S. Jeyanesan
6. Treasurer CACM
7. Rev. M. Jeyananthan- Convener
8. Miss. Thevasagayam
9. Mr.G.Rajanayagam–English Editor
10. Rev.Rajan Rohan

### Ministerial Committee
1. Chairperson CACM - Convenor
2. Dr. Darshan Ambalavanar
3. Principal, CTS
4. Dr. Prince Jeyatheva
5. Mrs. I. Jeyakumaran
6. Mrs. Vasanthy Rajaratnam
7. Mrs. N. Perambalam
8. All Regional Ministers

### Property Management committee
1. Treassurer CACM - Convener
2. Mr. G. D. Newton
3. Mr. E.W.Selvarajah
4. Rev. E. P. Solomons
5. Rev. S. Kuganeswaran
6. Mr.I.Arulrohan
7. Mr.G.Rajanayagam
8. Rev.Nevil Rubaraj
9. Mr.A.Jeyarajan
10. Mr.J.P.Mills
11. Chairperson, CACM

### Building Committee.
1. Mr.Ernest Thambinayagam
2. Mr. D.G.Newton.
3. Mr.E.W.Selvarajah,
4. Mr A.Jayarajan.
5. Mr.N.D.Selvarajah
6. Rev. S. Kuganeswaran.
7. Mr.S.Ratnavel

### Christian Theological Seminary Council
1. Chairperson CACM
2. Treasurer CACM
3. Principal - Convener
4. Registarer, CTS
5. Dean of Students, CTS
6. Representative of OSA
7. Dr. Darshan Ambalavanar
8. Rev. V. Rajkumar
9. Rev.A.Jeyakumaran
10. Rev.Dr.S.Jeyanesan
11. Rev. D. S. Mathiyaparanam
12. Dr.Prince J.Jeyatheva
13. Rev.T.Thevanesan

### Central Committee for Children Education & Religious Education
1. Chairperson CACM
2. Regional Clergy Representative North
3. Regional Clergy Representative East
4. Regional Clergy Representative Vanni
5. Regional Clergy Representative UP/COL
6. Regional Lay Representative North
7. Regional Lay Representative East
8. Regional Lay Representative Vanni
9. Regional Lay Representative UP/COL
10. Rev.A.Jeyakumaran - Convenor
11. Mrs.Santhiapillai
12. Dr.Darsan Ambalavanar
13. Mrs.K.Mahendrakumar

### Central Committee for Evangelism
1. Chairperson, CACM
2. Regional Clergy Representative North
3. Regional Clergy Representative East
4. Regional Clergy Representative Vanni
5. Regional Clergy Representative UP/COL
6. Regional Lay Representative North
7. Regional Lay Representative East
8. Regional Lay Representative Vanni
9. Regional Lay Representative UP/COL
10. Rev.S.I Anantharajah
11. Rev.Dr.S.Jeyanesan - Convenor

### Central Committee for Youth Ministry
1. Chairperson CACM/ Nominee
2. Regional Clergy Representative North
3. Regional Clergy Representative East
4. Regional Clergy Representative Vanni
5. Regional Clergy Representative UP/COL
6. 2 Regional Youth Representative North
7. 2 Regional Youth Representative East
8. 2 Regional Youth Representative Vanni
9. 2 Regional Youth Representative UP/COL

### Women's Fellowship - Central Committee
1. W/O Chairperson, CACM - Convenor
2. Regional W F President, North
3. Regional W F President, East
4. Regional W F President, Vanni
5. Regional W F President, UP/COL
6. Regional women Representative North
7. Regional women Representative East
8. Regional women Representative Vanni
9. Regional women Representative UP/COL
10. Mrs. Vasanthy Rajaratnam
11. Mrs. I. Jeyakumaran

### Fund raising committee
1. Ms Ruki Mather,
2. Mrs Jeewanam Watson,
3. Mrs Kala Mahendrakumar
4. Mr T.Sathianathan,
5. Mr.Prem Mills,,
6. Mr Roy Wijeratnam.
7. Mrs Shelena Premkumar,
8. Mr G.Rajanayagam.
9. Dr S.N. Surendran.
10. Mr Ranjit.
11.) Mrs.Vasanthy Rajaratnam
12.) Rev.Dr.S.Jeyanesan
13.) Rev.Nevil Rubaraj

### Social action and Justice Committee
01. Rev.Jude Sutharshan – Convener
02. Rev.Rajan Rohan
03. Rev.Gnanapragasam
04. Mrs.Shelina Premkumar

### Pension Fund
01. Rev.M.Jude Sutharshan
02. Mr.S.Vijayakulasingam
03. Mr.T.Saththiyanathan
04. Mr.G.Rajanayagam
05. Mrs.Vasanthy Rajaratnam

### Arbitration Committee
01. Rev.Dr.S.Jeyanesan
02. Rev.P.R.Navaendraanugoolan
03. Mr.N.Thampimuththan
04. Mrs.Vasanthy Rajaratnam
05. Mr.N.D.Selvarajah

# Executive Members of the CACM
1. The Rev.P.Enoch Punitharajah- *Chairperson*
2. Dr.Henry Rajaratnam - *Vice Chairperson*
3. The Rev.A.B.Thevathas - *Gen.Secretary*
4. Mr.V.Mithira Ranjan - *Gen.Treasurer*
5. The Rev.V.Rajkumar - *Representative from Jaffna Region*
6. Mr.S.J.Selvarajah - *Representative from Jaffna Region*
7. Mr.T.Uthayakmar - *Representative from Jaffna Region*
8. Miss.Diana Perampalam - *Representative from Jaffna Region*
9. The Rev.S.I.Anantharajah - *Representative from Eastern Region*
10. Mr.V.Sinnathurai - *Representative from Eastern Region*
11. Mrs. Seleena Premkumar - *Representative from Eastern Region*
12. Mr.P.Sasikaran - *Representative from Eastern Region*
13. The Rev.S.Daniel Mohan - *Representative from Col/Up Region*
14. Mr.Mano Thevasagayam - *Representative from Col/Up Region*
15. Mrs.Irene Rameshkumar - *Representative from Col/Up Region*
16. Miss.S.Sathiyanathan - *Representative from Col/Up Region*
17. The Rev.D.S.Kuhaneswaran - *Representative from Vanni Region*
18. Mr.S.Uthayaraj - *Representative from Vanni Region*
19. Mrs.Sutha Suthakar - *Representative from Vanni Region*
20. Mr.K.Prethapan - *Representative from Vanni Region*
21. Mr.S.B.Sathiyaseelan - *Representative from* General Community
22. Mr.Roy Vijayaratnam - *Representative from* Medical Field
23. Dr.Darshan Ambalavanar - *Representative from* Educational Field

## May Day Quotes & Sayings 2012

■ "Isn't it appropriate that the month of the tax begins with April Fool's Day and ends with cries of "May Day!"?"

■ It is necessary to work, if not from inclination, at least from despair. Everything considered, work is less boring than amusing oneself.

Charles Baudelaire

■ God sells us all things at the price of labour.

Leonardo da Vinci

■ May God stay with u this day & give u peace of mind.May God give u a happy heart & his love all the time. Good luck God give me work, till my life shall end And life, till my work is done.

Epitaph of Winifred Holtby

■ The only liberty an inferior man really cherishes is the liberty to quit work, stretch out in the sun, and scratch himself.


H.L. Mencken

■ If all the cars in the United States were placed end to end, it would probably be Labor Day Weekend.

Doug Larson

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Saint Mark the Evangelist Martyr



| | |
|---|---|
| Born | : 1st century AD<br>Cyrene, Pentapolis of North Africa |
| Died | : April 25, 68 AD |

## Jaffna Regional Easter Bajan



The Church of the American Ceylon Mission, Jaffna Region and Chrita Seva Ashram jointly organized the Easter Bajan on The Easter day, 2012 at 3.30 pm. Rev.Bro. Luxan did the welcoming address. A welcome dance was staged by an Ashram Worshiper. Rev. Thevamithiran said the inaugural prayers. Choristers came to the stage in a procession. The multi parish choir comprising of Alaveddy, Erlalai North, Uduvil, Manipay, Jaffna, Sathiyapuram and Ashram took part in the singing. The sang 10 songs reflected on the passion narratives and the meaning of Passion. A reflection for each songs was said by Rev. M. Jude Sutharshan. Rev.Father. Brayan, Parish Priest of Poonakari, Jaffna Diocese of Roman Catholic Church, was invited as the guest speaker for the occasion.

The music was done by Mrs.Jebajothy Christina Sutharshan (Keyboard), Mrs.Tharshini Daniel (Rythem Guitar) and Mr.Yasonath (Tabla).

Rev.V.Rajkumar said the final prayers and benediction. A big crowd of people came for the function and all were invited for tea by Ashram friends.

# Basic for Administration

**Two are better than one because they have good rewards for their effort. For if either falls, his companion can lift him up. Also, if two lie down together, they can keep warm; but how can one person alone keep warm? And if somebody overpowers one person, two can resist him. A cord of three stands is not easily broken.**

Ecclesiastes 4:9-12

This passage of Scripture came to life me several years ago as I was completing my qualifications using underwater breathing equipment (SCUBA) in the Navy. The final qualification was a deep ocean dive that occurred off the coast of Jamaica. There, deep fresh-water wells boiled up from the ocean bottom fed from island rivers that had gone underground only to surface several hundred yards off shore. Similar to sinkholes, these depressions had unusually clear water. The marine life was unique. My diving instructor chose a dive of about 150 feet.

As we entered the water and began our descent, I noted the beautiful marine growth on the walls of the well. Because of the clarity of the water, the colours of the growth remained vivid for several feet down. I noted that at the bottom of the well were several sharks. There was no concern because they looked to be only a few feet i length-far smaller than the many sharks I had dived with off the coast of Florida. As we continued our descent, I put the sharks out of my mind. At about 110 feet down, I again looked, and the sunk to the bottom of the hole. Judging from the size of the chair, the shark was about ten to twelve feet long. And he had many equally large friends.

one of the sharks looked up and tool note of the four tempting legs hooked to two bodies dangling down like a meal. And they began to circle up toward us. My diving instructor tapped me on the head and pointed to his writing pad with this message: "Place your back to mine and clank your diving tank on mine as we go up." I liked the "go up" part but didn't understand the clanking part. The body must acclimate to changes in pressure as the diver rises. At every thirty-two feet you must stop and wait. We would have four stops on the way up.


the trip to the surface was long and agonizing. We pushed off the sharks every once in a while with our probe sticks. And of course we clanked. The last pressure stop seemed like an eternity, but just as soon as I could do so safely, I popped out of the water in one motion and into our rubber raft. After getting my composure back, I was able to relive the adventure with my diving instructor. "That was a good idea banging our tanks to scare them off," I said.


"That clanking noise probably made them mad," he replied. "The reason I had you clank your tank against mine was to let me know you were still there looking after my backside. If you had stopped clanking, I would have assumed you had gotten eaten. and I would have gone to plan B."

As in every venue of ministry, there must exist some semblance of organization-a plan A and a plan B-in order to move forward. Ministers are called to minister. But this is difficult to achieve without an understanding of how to go about carrying out that ministry. Church leaders do not function in isolation; boards, committees, councils, teams, deacons and other staff members, surround them. Effective and efficient ministry requires the institution to develop some principles of administrative organization.

**By Robert H. Welch**

## Suthanthirapuram church's temporary building was reopened





The Suthanthirapuram Parish in Mullaitevu District was a refuge for many people during the war time in 2009. After three years, the church's temporary building was reopened and the resettled congregation came for worship on 27th of March, 2012, first time after the displacement. Under the leadership of Rev.S.Kuganeswaran, the regional chairperson of Wanni, all the pastors who serve in Wanni region took part in the worship. The pastors were sent to all the parish members' houses by the directions of the local priest. After the finishing of the house visits, they all gathered at the church and had a vigil prayer with Eucharistic worship started at 7 pm.

## Annual Sports Festival of the Murasumoddai Nursery.





"The Church of the American Ceylon Mission Nursery in Murasumoddai had their Annual Sports Festival on 30th of March 2012, It was a very happy and joyful event for the nursery children. There are 50 children attending the nursery. Two teachers hailing from this area are in charge of the children. All the children, teachers, parents and community members participated in the event to make it a memorable occasion. We are very grateful to the Colombo Church of CACM for supporting the running of this Centre.

Mr. T. Varathan (Principal of KN/ Murukanantha College, Murasumoddai) was the Chief Guest at this function. Rev. D. S. Mathiyaparanam (Regional Secretary, CACM - Vanni), attend ed the event as Guests of Honour.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



அண்மையில் பெரியநீலாவனையில் உள்ள புனித அந்திரேயா ஆலயத்தின் இளையோர் மன்றமும் அம்பாறையில் உள்ள கானான் நம்பிகைத்திருச்சபையும் இணைந்து நடாத்திய ஒருநாள் இளையோர் கூடலின் படத்தை காணலாம



உலக பெண்கள் தினத்தையொட்டி பெரியநீலாவனை புனித அந்திரேயா ஆலய பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்த விசேட நிகழ்வில் பங்குபற்றின ஊரணி, பெரியநீலாவனை சபைகளின் பெண்கள் ஒன்றியத்தின் உறுப்பினர்களை படத்தில் காணலாம்.






ஆமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி ஈனோக்.பூ.புனிதராஜா அவர்கள் வளத்தாப்பிட்டி, அம்பாறையில் உள்ள நற்தூது பணியக சிறுவர்களை சந்தித்து கலந்துரையாடுவதனை படக்கில் காணலாம்.



கல்வி பொது சாதாரண தர மணவர்களுக்காக அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 15 நாள் தொடர் கருத்தரங்கில் 31 கிராமிய மாணவர்கள் தெரிவு செய்யப்பட்னர், அவர்களுடன் குருமுதல்வர் வண பி.ஆர் நவேந்திரானுகூலன், முகமையாளர் கலாநிதி த.அம்பலவாணர், இணைப்பாளர் பா.சசிகரன் கணக்காளர் தே.தேவமனோரஞ்சன் ஒருங்கிணைப்பாளர் ஜெ.ஞானசீலன ஆகியோரை படத்தில் காணலாம்.



செரம்பூர் பல்கலைகழகத்தின் பட்டமளிப்பு விழா இம்முறை இந்தியாவின் இமய மலைச்சாரலிலுள்ள டேறா டுன் எனும் இடத்தில் அமைந்த NTC இல் (New Theological Seminary) 11.02.2012 அன்று மாலை 4.30 மணிக்கு நடைபெற்றது. செரம்பூர் கல்லூாயில் அங்கம் வகிக்கும் 49 கல்லூரிகளை சேர்ந்த இறையியல் பட்டத்திற்கான மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். இலங்கையிலிருந்து CACM திருச்சபையின் அருட்சகோதரர்களான ம.லூக் ஜோன் ஆ. கமலகுமாரன் ஆகியோர் தமது இளந்தேவியல் பட்டத்தினை இப்பட்டமளிப்பு விழாவில் பெற்றுக்கொண்டனர். அதிபர்கள் சார்பாக கிறிஸ்தவ இறையியல கல்லூரி பதில் அதிபர் வண.ஏ.எஸ்.தேவகுணானந்தன அவர்களும் கலந்துகொண்டார்.

# W.C.M விருந்தினரின் காரைநகர் விஜயம்

அமெரிக்காவிலிருந்து பரந்துபட்ட திருச்சபைகளின் பிரதிநிதிகள் (W.C.M) பதினான்கு பேர் காரைநகர் பிரதேசத்திற்கு வருகை தந்தார்கள். இவர்களோடு சேர்ந்து C.A.C.M திருச்சபையின் முன்னாள் தலைவர் வண.அ.ஜெயகுமாரன், பொருளாளர் திரு.அ.ஜெயராஜன் ஆகியோரும் சமூகம் தந்தனர். காரைநகர் பிரதேசத்தில் எமது திருச்சபையினால் நடாத்தப்படும் சமூகம் சார்ந்த பணிகளான முன்பள்ளி மற்றும் மாலை நேர வகுப்பு பிள்ளைகளையும் பார்வையிட்டனர். கலை நிகழ்வுகளை நிகழ்த்தி பிள்ளைகள் விருந்தினரை மகிழ்வித்தனர். நினைவுச் சின்னங்களும் கையளிக்கப்பட்டது.

# வெறுமையில்......

குரல் 1:

நாங்க திரும்பவும் எங்கட காணிக்கு வந்த போது அங்க எதுவுமே இருக்கயில்ல. வெறும் காணி தான் இருந்தது. ஆனா எங்களால வாழ முடியும் திரும்பவும் எல்லாதையும் கட்டிமுடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கு

குரல் 2:

*எங்கட வீடே இல்லங்கய்யா. மண் வீடு தான் இருந்துச்சு. கூரைய கழற்றிட்டு போனதால எல்லம் கரைஞ்சு வெறும் மண் மேடாதான் இருக்குது. இதுக்கு மேலயே இன்னொரு வீட்ட நான் கட்டிருவேன*

குரல் 3:

ரொம்ப நாளைக்கு அப்புறமா தான் எங்கட ஊருக்கு நாங்க வந்திரிக்கம். எங்கட காணி எல்லாம் வெறும் பத்தையா தான் இரிக்கி. ஆனா நாங்க மறுகவும் பழைய மாதிரி இருக்கலாம் என்று அம்மா சொன்னாவு. நாமளும் அத தான் நம்புறம்.

இது எமது மக்கள் மீள்குடியேற்றத்திற்கு வந்த போது வெறுமையான தமது நிலங்களை பார்த்து வெறுமையின் மத்தியில் அவர்கள் சொன்ன வார்த்தைகள். பல எண்ணங்களுடன் மீளவும் குடியேற வந்த மக்களுக்கு கிடைத்த செய்தி "இங்கு ஒன்றும் இல்லை".

தமது கண்களால் கண்ட அநேக காட்சிகள் மீளவும் வந்த போது எதுவும் இல்லை. தாம் கண்டவை கேட்டவை தொட்டு பார்த்தவை எவையும் இல்லை. இவை அனைத்திற்கும் எமது மக்களே சாட்சிகள்.

இங்கும் ஒரு கல்லறை வெறுமையாக உள்ளது. மாற்கு16:1-8, மத்தேயு28:1-10, லூக்கா24:1-12 யோவான் 20:1-10 ஆகிய பகுதிகள் வெறுமையான கல்லறையைப் பற்றி பேசுகின்றன. இயேசு உண்மையிலே இறந்தார் என்பதற்கும் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் என்பதற்கும் பின்னர் அக்கல்லறை வெறுமையாக இருந்தது என்பதற்கும் சாட்சிகள் இயேசுவின் பெண் சீடர்கள்.

அதிகாலையில் இருட்டோடே கல்லறைக்கு சென்றவர்கள் கண்டது வெறுமையான கல்லறை. தாம் அங்கு இருக்கும் என எதிர்பார்த்த ஒன்று இல்லை. கல்லறை திறந்து கிடந்தது. அங்கு இயேசுவின் உடல் இல்லை.

அன்றைக்கு இருந்த இயேசுவைப் பின்பற்றிய சமூகத்திற்கும் இன்று எமக்கும் "இயேசு உயிர்த்தெழுந்தார்" அதாவது மரணம் வெல்லப்பட்டது என்ற செய்தியை தந்து கொண்டிருப்பது வெறுமையான கல்லறை. அத்துடன் இயேசுவின் மரணம் அவர் இன்னும் அதிகமாய் உயர்த்தப்பட்டார் என்ற செய்தியை எமக்கு தருகின்றது. முதலில் சிலுவையில் உயர்த்தப்பட்டார்: சாவுக்கு பின் உயிர்த்தெழுந்ததால், விண்ணேற்றம் அடைந்ததால் மீண்டும் உயர்த்தப்பட்டார்.


வெறுமையான கல்லலை புதிய வாழ்வின் நம்பிக்கையை திருச்சபைக்கு கொடுப்பது போல இன்று தமிழ் சமூகம் காணுகின்ற வெறுமை, ஒன்றுமில்லாமை, ஏமாற்றம் என்பது புதுயுக வாழ்வுக்கு வித்திடுகிறது என நாம் புரிந்து கொள்ள வேண்டும். வெறுமையான கல்லறையினூடாக உயிர்த்தெழுதலின் உண்மையை கிறிஸ்தவம் பெற்றுக்கொண்டது போல தமிழ் சமூகமும் இன்றைய சம கால யதார்த்த நிலையில் நின்று வெறுமையில் மீந்திருக்கின்ற தமிழ் சமூகத்தினூடாக புதிய வாழ்வை நாம் காண வேண்டும்.

மூடியிருந்த கல்லறை, இருள், தனிமை இவைகளின் மத்தியில் ஒரு "கரு" உருவானது. ஒரு சாதாரண கல்லறை கருவறையானது. தமிழ் மக்களின் இன்றைய இருள் நிறைந்த வாழ்வும் கருவறையாக மாறும். அதுவே இறையாட்சி எமது மண்ணில் மலரும் நேரம்.

-சகோ.ம.லூக்ஜோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





CACM யாழ்.பிராந்தியத்தினரால் புதிதாக திருச்சபையின் பொறுப்புக்களை பொறுப்பேற்றிருக்கும் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு வரவேற்பு நிகழ்வொன்றை மானிப்பாய் திருச்சபையில் நடாத்தியது. அதனையே மேலுள்ள படங்களில் காணலாம்.






அண்மையில் CACM யாழ்.பிராந்தியமும் கிறிஸ்த சேவ ஆச்சிரமமும் இணைந்து நடாத்திய ஈஸ்டர் பஜனை நிகழ்வை மேலுள்ள படத்தில் காணலாம்.






அண்மையில் CACM இளம் குருமாருக்கான "Intergrated to Intergrate" என்ற தலைப்பில் நடைபெற்ற ஆற்றுப்படுத்தலோடு கூடிய ஞான ஒடுக்கம் பெரியநீலாவணையில் உள்ள தூய.அந்திரேயா ஆலயத்தில் நடைபெற்றது. இதனை Indian Sunday School Union Director டாக்டர் அஜித் பிரசாதம் அவர்களால் நடாத்தப்பட்டது. அவற்றை மேலே காணலாம்.




அமெரிக்காவிலிருந்து பரந்துபட்ட திருச்சபைகளின் பிரதிநிதிகள் (W.C.M) பதினான்கு பேர் கிறிஸ்தவ இறையியல் கல்லூரிக்கு வருகை தந்தபோது அவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. இறையியல் கல்லூரி வளாகம் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை, தவில் நாதஸ்வர வாத்திய இசை ஆகியவற்றோடு விருந்தினர் அழைத்துச் செல்லப்படுவதையும், கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வையும் மேலே படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
PUBLIC LIBRARY
JAFFNA

# சிறுவர் சித்திரம்

செழிப்பான ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவன் ஒரு மரத்தின் கீழ் உட்கார்ந்து, கண்களை மூடி, புல்லாங்குழல் வாசித்துக் கொண்டிருந்தான். புல்வெளியைச் சுற்றி வேலி போடப்பட்டிருந்தது. அதன் அருகே ஒரு ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலிக்கு வெளிப்பக்கம் இருந்த ஓநாய் ஒன்று ஆட்டுக்குட்டியைப் பார்த்தது.

வேலிக்குள் முகத்தை நுளைத்துக் கொண்டு, ஓநாய் எதையோ பார்ப்பது போல் பாசாங்கு செய்தது. அதைப்பார்த்த அந்த ஆட்டுக்குட்டி "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டது.

ஓநாயும் "நண்பா....இங்கே இளசான புல் கிடைக்குமா என்று பார்க்கிறேன் ! இளம் புல் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைத் தின்று ஜில் என்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! உங்களுக்கெல்லாம் யோகம் கிடைத்திருக்கிறது. - எனக்கு அது கிடைக்கவில்லையே....!" என்று வருத்தத்துடன் கூறுவது போல் கூறியது.

" அப்படியா....? நீ புல்லா சாப்பிடுவாய்....? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று எனது அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டது ஆட்டுக்குட்டி. "சேச்சே அதெல்லாம் சுத்தப் பொய்" என்றது ஓநாய்.

"அப்படியென்றால் இரு. நான் வெளியே வந்து, மலையின் அந்தப் பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இருவரும் போய் அதைச் சாப்பிட்டு விட்டு, நண்பர்களாக, ஜாலியாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கினூடாக நுழைந்து ஓநாயின் பக்கம் போயிற்று.

உடனே ஓநாய் அதன் மீது பாய்ந்து அதைக் கொன்று தின்றது. அந்த ஆட்டுக்குட்டிக்கு தானாக அறிந்து கொள்ளத் தெரியவில்லை. அது போகட்டும் பரவாயில்லை. அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சைக் கேட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. மதிப்பு வாய்ந்த தன் உயிரை இழந்திருக்காது அல்லவா?

யாத்திரகாமம் 21:12 " உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக"

நீதிமொழிகள் 1:8 " என் மகனே, உன் தகப்பன் புத்தயைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே"

நீதிமொழிகள் 6:20 " என் மகனே உன் தகப்பன் கற்பனையைக் காத்துக் கொள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே"

எபேசியர் 6:1-3 " பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது"

# திருமணம்



உடுவில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையைச் சேர்ந்த திரு.திருமதி.மகேஸ்வரன் அவர்களின் புதல்வி கிறிஸ்ரினா டிலோஜினி அவர்களுக்கும் கோப்பாய் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த திரு.திருமதி.கே. ஞானோதயன் அவர்களின் புதல்வன் பெனோ இராஜோதயன் அவர்களுக்கும் 09-04-2012 அன்று மாலை 4.30 மணிக்கு சுண்டுக்குளி பரி.யோவான் ஆலயத்தில் திருமணம் நடந்தேறியது. இத்திருமண ஆராதனையை அங்கிலிக்கன் திருச்சபையின் ஆர்ச் டீக்கன் வண.ஜெயந்த் ஜெயவீரசிங்கன் அவர்கள், வண.ஜெ.ஜெபமோகன், வண.ஜீ.என். ஞானப்பொன்ராஜா, வண.தனேந்திரா ஆகியோரின் உதவியோடு நடாத்தினார். திருமணத் தமபதியினருக்கு வாழ்த்துச் செய்தியினை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை யாழ்.பிராந்தியத் தலைவர் வண.வ.இராஜ்குமார் வழங்கினார். திருமணத்தின் பின்னர் பரி.யோவான் கல்லூரி மண்டபத்தில் விருந்தினருக்கான ஐக்கிய இராப்போசன விருந்து அளிக்கப்பட்டது.

# விலையேற்றம்........... விலையேற்றம்.........

2012 பெப்பிரவரியில் எரிபொருள் விலையேற்றம்! போக்குவரத்து, மின்சாரம், எரிவாயு ஏன் அனைத்துப்பொருள்களும் விலையேறின. சேவைகளினது கட்டணங்கள் உயர்ந்தன. ஆயினும் கடந்த 2011 ஆண்டில் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் 93 பில்லியன் ரூபாவையும், இலங்கை மின்சாரசபை 25.5 பில்லியன் ரூபாவையும் இழந்து நட்டமானது. ( இலங்கை மத்திய வங்கி அறிக்கை)

அதிகார ஆதரவும் பொருளாதார சமுகத்தின் அரவணைப்பும் அற்ற ஏழை மக்கள் வீரக்தியோடு தடுமாறுகின்றனர். இவ்வேளையில் வாக்குத்தத்தத்தை உச்சரித்துக்கொண்டு ஆறுதல் கூறியே பழகிப்போன திருச்சபை திரும்பவும் உச்சரிக்கிறது " *சிங்கக்குட்டிகள் பட்டினி கிடந்து தாழ்ச்சி அடையும், ஆனால் ஆண்டவரை நம்புபவர்க்கு ஒரு நன்மையும் குறைவுபடாது*".

வன்முறை அடக்குதல் எனும் பெயரில் யுத்தம், தேசத்தின் எழுச்சி எனும் பெயரில் வெளிநாட்டவர் மூலதனம், உலகளாவிய கூட்டமைப்புகளின் கபளீகாரம், இவர்களுடன் ஒன்றாக இணைந்து நிவாரணம் பகிர்கின்றது நம் ஆட்சி. நிர்வாணத்துடன் நிற்கும் மனிதம், சொந்த நிலத்திலே அந்நிய நிறுவன பெயர்ப்பலகையுடன் கூடாரம், இந்நிலையில் நிவாரண பதிவுகள் தானோ கடவுளின் அருள்??

மிககுறைந்த கூலிக்காக நீண்டநேரம் வேலைசெய்தும் அரைவயிற்றடன் படுக்கும் பெண்களும், சிறுவர்களும். திருச்சபையின் பதாதையில் காண்கிறோம் "*என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவாலே எல்லாம் செய்ய எனக்குபெலன் உண்டு*"

எரிபொருள் விலையேற்றம் யாருக்கு பிரச்சினை? யாரை பாதிக்கின்றது? அரசின் அறிக்கைப்படி தலாவருமானம் 2007 இல் 1.617 ஐ.அ டொலரில் இல் இருந்து 2011 ற்கு 2.830 ஆக உயர்ந்துள்ளது! .( இலங்கை மத்திய வங்கி அறிக்கை) ஆக நாடு முன்னேறியுள்ளது. வருமனம் அதிகரித்துள்து.

ஆனால் வியாதியிலும் விரக்தியிலும் இறக்கின்றார் ஏழை மனிதர், துயரம் தீராத வறுமை இறைவா நீ எங்கே? காசோ கீத்தமோரி (துன்புறும் இறைவன் இறையியல் 1946-யப்பான்) சொல்லுகிறார் "*இறைவன் துன்புறும் மக்களுடன் தன்புறுகிறார்*" ஏறட்டும் விலைவாசி கவலையை விடு எரியும் விளக்கை அணைத்து விட்டு வயிறை எரியவிடு இறைவனும் துன்புறுகிறான்!! நாம் திருப்பாடல் ஒன்றைப்பாடுவொம் " அவர் என்னை புல்லுள்ள இடங்களிலே மேய்த்து அமர்ந்த தண்ணீர் அண்டை நடத்துகிறார்"

ஒருநாட்டில் உள்ள வளங்களில் மிகவும் முதன்மையானது மனித வளமே! அந்த மனித வளத்தை வறுமை அழித்துக்கொண்டிருக்கிறது. இயேசு சொன்னார் "*என் பின்னே வா ! நான் உன்னை மனிதரை பிடிப்பவர் ஆக்குவேன்*" எந்த மனிதரைப்பற்றி சொன்னார்? வறுமையில் உழன்று எலும்பும் தோலுமாக கிடக்கும் ஏழை மனிதரையா? மலம் கழிக்கும் இடத்தை மாளிகையாக அமைத்துக்கொண்டு நறுமணத்தை விசிறிக்கொண்டே இயந்திரங்களுடன் உறவாடும் பொலிவான உருவங்களையா?

உலகளாவிய பொருளாதார வீக்கத்தைக் கண்டு விசுவாசத்திற்கே விளக்கம் சொல்லும் திருத்தொண்டர்களும் திருத்தளங்களும் எத்தனை எத்தனை??? உல்லாச மாளிகை அமைத்துக்கொண்டு குளிரூட்டப்பட்ட அறைக்குள் இருந்தவண்ணம் துன்புறும் இறைவனை பிரசங்கிக்கும் தொண்டர்கள் நாமிருக்க.... பாவம் அரசு? அதன் மீது எப்படி குற்றம் சும்த்துவது?

இப்போது திருச்சபை சிந்திக்க வேண்டியது ஒன்றைத்தான்! இறைவன் துன்புறும் மக்களோடு துன்புறும் மக்களுக்காக துன்புறுகிறான் என்றால் திருச்சபை துன்புறுவது எப்போது?

## கவிதைப் போட்டி

*அன்பு வாசகர்களே!*

*எதிர்வரும் யூலை மாதம் எமது அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை உதயமாகி 5 வருடங்களை கடக்கவிருக்கிறது. இதனையிட்டு எமது பத்திரிகை ஒரு கவிதைப்போட்டியினை நடாத்த திட்டமிட்டுள்ளது. உங்கள் கவிதைகளை வரைந்து எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறும் ஒரு கவிதைக்கு மாத்திரம் ரூபா.1000 பரிசாக வழங்கப்படும்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
*"கவிதைப் போட்டி",*
*உதய தாரகை*
*கிறிஸ்தவ இறையியல் கல்லூரி,*
*மருதனார்மடம், சுன்னாகம்.*

## சமூகப் பாவத்தால் வருவது வியாதி...!

- வண.ஏ.வி.இயேசுதாசன் -

*மண்ணுக்கும் பயிருக்கும் நஞ்சு மருந்தாகுது*
*கண்ணுக்குத் தெரியாமல் வியாதி*
*விருந்தாகுது*
*செயற்கை உரமும், உயிர் கொல்லி மருந்தும்*
*மகசூலைப் பெருக்குது மனித உயிரைச்*
*சுருக்குது.*

*டீசல், பெற்றோல், புகை மாசுபடுத்துது*
*காற்றை*
*கூற்றாகி நோயாகி உயிர் குடிக்குது மாசுடை*
*காற்று*
*கனி எல்லாம் நச்சு மருந்தில் பழுத்தாச்சு*
*உண்டவன் உடலில் நோய் வந்தாச்சு*

*செயற்கை உரத்தாலும் மருந்தாலும் உணவு*
*தரும் விவசாயி*
*பெருநோய் தருவிக்கும் பேராளி*
*பூச்சி நாசினி மணம் மாறா மரக்கறிச்*
*சந்தையிலே*
*ஆச்சுது நோய்த் தாக்கம் உண்பவர்*
*உடம்பிலே*

*சதை உடம்பு சிதையுது நச்சு உணவாலும்*
*உணவு முறையாலும்*
*இரசாயனக் கலப்புணவு தந்ததே நோயுடம்பு*
*காசுப் பசியால் வந்த விவசாய அறுவடை*
*நோய்க் கசிவாய் வந்து தந்ததே நோய்*
*வாடை*

*காசு மயக்கம் அயலவனில் அன்பு காட்ட*
*மறுக்கும்*
*சுயநலப் பார்வை பொது நோக்கை*
*வெறுக்கும்*
*சிறு தோட்டம் அமைத்து சிந்தை நிறைய*
*சமைத்து*
*உணவாக்கி உறுநோய் விலக்குவீர்.*

இப்பத்திரிகை அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் உதயதாரகை [illegible] டை சந்தியில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 08-05-2012 அன்று வெளியிடப்பட்டது.

Digitised by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org